முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1660

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.04.2024, திங்கட்கிழமை

1. வள்ளலே ஆறுமுக அரங்கனே
   வழிகாட்டி உலகுக்கு தர்மபலம்
   வல்லமை பட வழிகாட்டி அருளுகின்ற
   அருளுகின்ற அரங்கனே ஆறுமுக ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 02 ம் நாள், 15.04.2024, திங்கட்கிழமை)
   ஆற்றல்பட அரங்கன் வழி கலியுக மக்கள்
   ஆன்மீக ஞான மேல்நிலை தேறி
3. மாற்றம் தனை உலகுக்கு தருவது உறுதி
   மண்ணுலகில் மகான் அரங்கன் உண்மை நெறியே
   உலகை காக்கக் கூடும்
   மாற்றம் கருதி உலகோர்
4. ஏங்கி நிற்க இந்த காலத்தில்
   ஆற்றல்பட அரங்கன் ஞானப்படை
   ஆன்மீக ஞான அரசியல் களம் கண்டு
   அகிலத்தை மாற்றுவது உறுதி உறுதி
5. உறுதி தந்து அரங்கனோடு யான் இருக்கின்றேன்
   உலகத்தில் ஆன்மீக ஞான களம் கண்டுவர விரும்பும் மக்களெல்லாம்
   ஓங்காரக்குடில் நோக்கி வந்து
   அரங்கன் வழி சரணடைந்து
6. நன்மை கருதி உலகோர் தீட்சை ஏற்று
   அரங்கன் தர்மத்தை வழிமொழிந்து ஏற்று
   ஏற்றுமே ஓங்கார ஞான வழியில்
   ஒன்றிணைந்து உலக சேமத்தில் கலந்தால் போதும்

7. ஆற்றல்பட உலகுக்கு மாற்றம் அரங்கன் வழிகாட்டலில் இனிதே நடந்தேறும்
அரங்கன் ஞானப்படைகள் வழி உலகத்தில் ஞான ஆட்சி
பெருமைபட உருவாக்கி சுப்ரமணியர் யானும்
பேருலகமே ஞான லோகமாக அருள்புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–